**ஏப்ரல் – 21**

# TNPSC துளிகள்

- தமிழக முதலமைச்சர் சிஃபி இன்பைனைட் ஸ்பேசஸ் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான தென்னிந்தியாவின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவு வகையில் தயார் நிலையிலான தரவு மைய வளாகத்தினைச் சிறுசேரியில் திறந்து வைத்துள்ளார்.
- சென்னையின் தேசியப் பெருங்கடல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (NIOT) உள்ள இந்தியாவின் ஒரே கடலடி ஒலியியல் சோதனை மையம் (ATF) ஆனது, பாரிசில் உள்ள சர்வதேச எடைகள் மற்றும் அளவீடுகள் வாரியத்தின் (BIPM) கீழ் கடலடி ஒலியியல் துறைக்கான இந்தியாவின் "நியமிக்கப்பட்ட ஆய்வகமாக" அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் 'குருதிக் குழாய் சீரமைப்பு முறையின் தந்தை' என்று அங்கீகரிக்கப்பட்ட மிகவும் புகழ்பெற்ற இருதயநோய் நிபுணர் மேத்யூ சாமுவேல் கலரிக்கல் சமீபத்தில் காலமானார்.
- கோயம்புத்தூரில் உள்ள அமிர்த வித்யாலயம் ஆனது அந்தப் பள்ளியின் 25வது ஆண்டு கல்வி சேவையைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட 2025 ஆம் ஆண்டு அமிர்த வித்யாலயம் உலக சாதனை விழாவில் 27 உலக சாதனைகளைப் படைத்து உள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆனது ஆளுகை தொடர்பான சர்வதேசக் காவல்துறைக் குழுவின் தலைமைப் பொறுப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- உலக சுகாதாரத் தினத்தன்று (ஏப்ரல் 07) மகப்பேறு கால மற்றும் பச்சிளம் குழந்தைகளின் ஆரோக்கியம் குறித்த ஓராண்டு காலப் பிரச்சாரம் தொடங்கப்பட்டது.
- மகாராஷ்டிரா அரசானது, முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பின் கல்லறை அமைந்து உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமான குல்தாபாத்தை 'ரத்னாபூர்' என்று மறு பெயர் இடவுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## புதிய சுற்றுலாத் திட்டங்கள் 2025



- சட்டசபையில் மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு முழுவதும் சுமார் 200 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள புதிய சுற்றுச்சூழல் சார் சுற்றுலா மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

- மாமல்லபுரம் (30 கோடி ரூபாய்), கன்னியாகுமரி (20 கோடி ரூபாய்), திருச்செந்தூர் (30 கோடி ரூபாய்), நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேளாங்கண்ணி மற்றும் நாகூர் (20 கோடி ரூபாய்) உட்பட தமிழ்நாடு முழுவதும் உள்ள முக்கிய மத சுற்றுலாத் தலங்களை நவீனமயமாக்குவதற்காக 100 கோடி ரூபாய் முதலீடு செய்ய அரசாங்கம் திட்டமிட்டு உள்ளது.
- காஞ்சிபுரம் மற்றும் மதுரையில் முறையே தமிழ்நாட்டின் பௌத்த மற்றும் சமண மரபுகளை வெளிப்படுத்தும் கலாச்சாரப் பாரம்பரிய மையங்களையும் மாநில அரசு நிறுவ உள்ளது.
- கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலைகள், கோமுகி மற்றும் மணி முத்தாறு அணைகள் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள கருமந்துறை ஏரி ஆகியவை சுற்றுலாப் பயணிகளுக்காக மேம்பட்ட உள்கட்டமைப்புடன் மேம்படுத்தப்படும்.

## 12 பாதுகாக்கப்பட்ட தளங்கள் – தமிழ்நாடு




- மொத்தம் 12 வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் /தளங்களாக அறிவிக்கப்பட உள்ளன.
- பின்வரும் இடங்கள் ஆனது பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் / தளங்களாக அறிவிக்கப்பட உள்ளன:
    - திருநெல்வேலி மாவட்டத்தின் மன்னார்கோயிலில் உள்ள தமிழி கல்வெட்டுகள்,
    - சிவகங்கை மாவட்டம் அரளிப்பட்டியில் உள்ள குடைவரை,
    - திண்டுக்கல் மாவட்டத்தில் கூத்தபூண்டியன் வலசு,
    - புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள V.கோட்டையூர்,
    - கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மல்லசந்திரத்தில் உள்ள கல் திட்டைகள்,
    - இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணியில் உள்ள அரண்மனை
    - நரிக்குடியில் உள்ள மறையூர் சத்திரம் மற்றும் இராஜபாளையம் தாலுக்காவில் உள்ள மீனாட்சிபுரத்தில் அமைந்துள்ள கற்பாறை மற்றும் குகை ஓவியங்கள்,
    - விருதுநகர் மாவட்டம் மம்சாபுரம் மற்றும் பிள்ளையார் நத்தத்தில் உள்ள பழைய மண்டபங்கள்
    - திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஏவூர், மற்றும்
    - விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள நாயனூர்
- மதுரையில் அமைந்துள்ள உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் கல்வெட்டுகளுக்கான

அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

### பாதரசத்தின் அளவு அதிகரிப்பு

| Trace inorganic Contaminants | USEPA (mg/L) | Indian Standards (mg/L) |
|---|---|---|
| Arsenic, as As | 0.05 | 0.05 |
| Cadmium, as Cd | 0.005 | 0.01 |
| Chromium, as Cr(VI) | 0.05 | 0.05 |
| Iron, as Fe | 0.3 | 0.3 |
| Lead, as Pb | 0.05 | 0.1 |
| Manganese, as Mn | 0.05 | 0.1 |
| Mercury, as Hg | 0.002 | 0.001 |
| Nickel, as Ni | 0.1 | 0.05 |

- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) ஆனது, தெற்கு மண்டலத்தின் தேசியப் பசுமை தீர்ப்பாயத்தின் (NGT) அறிவுறுத்தலின் பேரில் சமீபத்தில் ஓர் ஆய்வை மேற்கொண்டது.
- NLC இந்தியா லிமிடெட் (NLCIL) நிறுவனத்தின் I, 1 A மற்றும் II ஆகிய சுரங்கங்கள் மற்றும் இரண்டாம் அனல் மின் நிலையம் அருகே அமைந்துள்ள நீர்நிலைகளில் பாதரசத்தின் அளவு உயர்ந்துள்ளதாக இந்த ஆய்வின் முடிவு எடுத்துரைக்கிறது.
- இங்குள்ள நீர்நிலைகளில் நீரில் சேகரிக்கப்பட்ட 17 மாதிரிகளுள் 15 மாதிரிகளில் மொத்தப் பாதரசத்தின் செறிவு லிட்டருக்கு 0.0012 மில்லி கிராம் முதல் 0.115 மில்லி கிராம் வரையில் குடிநீருக்கான தரநிலைகளின் அனுமதிக்கப்பட்ட வரம்புகளை விட அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.
- இந்த நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்ட இடங்களில் ஒன்றான பக்கிங்ஹாம் கால்வாயில், பாதரசத்தின் செறிவு அனுமதிக்கப்பட்ட வரம்பை விட 115 மடங்கு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- இதே போல், நிலத்தடி நீர் மாதிரிகளில், பாதரசத்தின் இருப்பு லிட்டருக்கு 0.0025 மில்லி கிராம் முதல் 0.0626 மில்லி கிராம் வரை இருப்பது கண்டறியப்பட்டது என்பதோடு இது அனுமதிக்கப்பட்ட வரம்புகளை விட 2.5 முதல் 62 மடங்கு அதிகமாகும்.


# தேசியச் செய்திகள்

### உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் இந்தியாவின் பங்கேற்பு

- நிதி ஆயோக் அமைப்பானது, 'வாகனங்களுக்கான தொழில்துறை: உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் இந்தியாவின் பங்கேற்பை மிகவும் மேம்படுத்துதல்' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது, வாகனத் துறையில் இந்தியாவின் உலகளாவிய மதிப்புச் சங்கிலி (GVC) திறனைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது மற்றும் உலகளாவியப் பெரும் தலைமைத்துவத்திற்கான உத்தி சார் வழிமுறைகளை எடுத்துக்காட்டுகிறது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வாகன உற்பத்தித் துறையின் பங்கு 7.1% ஆகவும் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உற்பத்தி துறையின் பங்கு 49%

ஆகவும் உள்ளது.

- உலகளவில் வர்த்தகம் செய்யப்படும் வாகனங்கள் உதிரி பாகங்களில் இந்தியாவின் தற்போதையப் பங்கு தோராயமாக 3% அல்லது 20 பில்லியன் ஆகும்.
- 2023 ஆம் ஆண்டில் சீனா சுமார் 8 மில்லியனுக்கும் அதிகமான மின்சார வாகனங்களை உற்பத்தி செய்வதுடன் உற்பத்தித் துறைகளில் தற்போது மின்சார வாகனங்கள் முன்னுரிமைகளைப் பெற்று வருகின்றன.




## நிவேஷக் தீதி முன்னெடுப்பு - இரண்டாம் கட்டம்



- முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (IEPFA) மற்றும் இந்தியா அஞ்சலகப் பண வழங்கீட்டு வங்கி (IPPB) ஆகியவை "நிவேஷக் தீதி" முன்னெடுப்பின் இரண்டாம் கட்டத்தினைத் தொடங்கியுள்ளன.
- இந்த உத்தி சார் ஒத்துழைப்பு ஆனது கிராமப்புறங்கள், பகுதியளவு நகர்ப்புற மற்றும் பின்தங்கிய (சேவைகள் எதுவும் சரியாக கிடைக்கப் பெறாத) பகுதிகளில் உள்ள பெண்களிடையே அடிமட்டப் பிரச்சாரம் மற்றும் சமூகம் சார்ந்த கல்வியளிப்பு மூலம் நிதி சார் கல்வியறிவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "நிவேஷக் தீதி" என்பது மகளிர் அஞ்சல் ஊழியர்கள் மற்றும் சமூகத் தலைவர்களை அவர்களின் உள்ளூர்ப் பிராந்தியங்களுக்குள் நிதியியல் ரீதியான கல்வியாளர்களாகச் செயல்படுவதற்குப் பயிற்சி அளிக்கும் ஒரு தனித்துவமான முன்னெடுப்பாகும்.
- இதன் முதல் கட்டத் திட்டத்தின் போது, இந்தியா முழுவதும் IPPB வங்கி நடத்திய நிதி

சார் கல்வியறிவு முகாம்களில் 55,000க்கும் மேற்பட்ட பயனாளிகள் பங்கேற்றனர்.


## M-CADWM திட்டம்

- மத்திய அமைச்சரவையானது, பிரதான் மந்திரி கிருஷி சிஞ்சாயி யோஜனா (PMKSY) என்ற திட்டத்தின் ஒரு துணைத் திட்டமாக 'கட்டுப்பாட்டுப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மையை நவீனமயமாக்குதல் (M-CADWM)' திட்டத்தினை அங்கீகரித்துள்ளது.
- 1,600 கோடி ரூபாய் ஆரம்ப ஒதுக்கீட்டுடன் தொடங்கப் படும் இந்த முன்னெடுப்பானது, 2025-2026 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- இது இந்தியாவில் நீர்ப்பாசன உள்கட்டமைப்பைக் கணிசமாக மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## தான்சானியா – 2024 ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத அளவுக்கு வெப்பம்




- தான்சானியாவில், இரவு நேர வெப்பநிலையானது தீவிரமாக உயர்ந்ததுடன், 2024 ஆம் ஆண்டானது இதுவரை இல்லாத அளவிற்கு வெப்பமான ஆண்டாக பதிவாகியுள்ளது.

- இரவு நேர வெப்பத்தின் முக்கியக் குறிகாட்டியாக உள்ள நாட்டின் சராசரி வருடாந்திர குறைந்தபட்ச வெப்பநிலையானது, சுமார் 19.3°C அளவினை எட்டியது என்பதோடு இது நீண்ட கால சராசரியை விட 1.1°C அதிகமாகும்.
- இந்த அதிகரிப்பு ஆனது, சராசரியை விட 0.4°C மட்டுமே அதிகமாக உள்ள அதிகபட்ச வெப்பநிலையில் பதிவான அதிகரிப்பை விட அதிகமாக இருந்தது.
- நாட்டின் பெரும்பாலான பகுதிகளில், அதிகபட்ச வெப்பநிலையானது சராசரியை விட 0°C முதல் 1°C வரை அதிகமாக இருந்தது.
- 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய சராசரி வெப்பநிலையானது 24.3°C என்ற அளவினை எட்டியது என்பதோடு இது இயல்பை விட 0.7°C அதிகமாகும்.
- இது 2023 ஆம் ஆண்டில் பதிவான முந்தைய பதிவினை விட விஞ்சியது என்பதோடு இது 1970 ஆம் ஆண்டில் பதிவுகள் தொடங்கியதிலிருந்து பதிவான அதிகபட்ச வெப்பநிலை ஆகும்.
- மொத்த மழைப்பொழிவு ஆனது சராசரியை விட 1,307.6 மில்லி மீட்டர், 285.2 மில்லி மீட்டர் (28 சதவீதம்) அதிகமாக பதிவானதுடன், இந்த ஆண்டு ஆனது, தான்சானியாவின் 1970 ஆம் ஆண்டில் இருந்து இதுவரையில், நான்காவது மிக அதிகம் மழைப்பொழிவு பதிவான ஆண்டாகவும் மற்றும் கடந்த இருபது ஆண்டுகளில் அதிகம் மழைப்பொழிவு பதிவான ஆண்டாகவும் உள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## 2025 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் வர்த்தக மாற்றம்




- அமெரிக்கா முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து சீனாவானது இடம் பெற்றுள்ளதுடன் இந்தியா வர்த்தகம் செய்யும் முதல் மூன்று நாடுகளின் பட்டியல் மாறாமல் உள்ளன.
- கடந்த நிதியாண்டில், அமெரிக்காவுடனான இந்தியாவின் ஏற்றுமதி 11.6% அதிகரித்து 86.5 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- அமெரிக்காவிற்கான இறக்குமதி 7.4% என்ற மெதுவான வேகத்தில் அதிகரித்து 45.3 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளதுடன் இதன் விளைவாக 41 பில்லியன் டாலர் வர்த்தக உபரி அதிகரித்துள்ளது.
- ஏற்றுமதியானது 14.2 பில்லியன் டாலராக சரிந்ததால், சீனாவுடனான இந்தியாவின்

வர்த்தகப் பற்றாக்குறை 100 பில்லியன் டாலர்களை நெருங்கியது.

- ஐக்கியப் பேரரசு ஆனது நான்காவது இடத்திற்கு முன்னேறியதால் சீனா தற்போது ஒரு இடம் சரிந்து, இந்தியாவின் ஐந்தாவது பெரிய ஏற்றுமதி தளமாக உள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சாம்பல் நிற இராட்சத அணிலின் கணக்கெடுப்பு





- பாக்கமலை மற்றும் கங்காவரம் மலைகளில் கணிசமான எண்ணிக்கையில் காணப் படும் சாம்பல் நிற அணிலின் கணக்கெடுப்பினை நடத்த விழுப்புரம் வனப் பிரிவு திட்டமிட்டுள்ளது.
- இந்த சாம்பல் நிற இராட்சத அணில் ஆனது, பொதுவாக தென்னிந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில், கேரள மாநிலத்தின் சின்னார் வனவிலங்குச் சரணாலயம் முதல் தமிழ்நாட்டின் ஆனைமலைப் புலிகள் சரணாலயம் மற்றும் பழனி மலைக் குன்றுகள் வரையிலான பகுதிகளில் கூடு கட்டும் என்று அறியப் படுகிறது.
- இந்த இனம் ஆனது செந்நிறப் பட்டியலில் அச்சுறுத்தலுக்கு உள்ளான இனமாக வகைப் படுத்தப் பட்டுள்ளது மற்றும் CITES உடன்படிக்கையின் இரண்டாவது பின்னிணைப்புப் பட்டியலின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.

- இந்த அணில் இனமானது 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் Iவது பட்டியலின் கீழ் அருகி வரும் உயிரினமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## தெலங்கானா – வெப்ப அலையினைக் குறிப்பிட்ட மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவிப்பு

- தெலங்கானா மாநில அரசானது, வெப்ப அலை மற்றும் வெப்பத் தாக்கு நோய் போன்ற பாதிப்பு நிலைமைகளை "குறிப்பிட்ட மாநிலம் சார்ந்த ஒரு பேரிடர்" என்று அறிவித்து உள்ளது.
- இது போன்ற பேரிடரில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (SDRF) 4 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குவதாகவும் அறிவித்து உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், அங்கு ஐந்து மாவட்டங்களைத் தவிர, மீதமுள்ள 28 மாவட்டங்களில் குறைந்தது 15 நாட்கள் வெப்ப அலைகள் நிலவியதாகக் கண்டறியப்பட்டது.
- இந்திய வானிலைத் துறையால் வெப்ப அலைக்கான விளக்கமானது வரையறுக்கப் பட்டு உள்ளது.
- குறிப்பிட்ட மாநிலம் சார்ந்த பேரிடர் என்று வெப்ப அலைகளை ஏற்கனவே தமிழ்நாடு, கேரளா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய சில மாநிலங்கள் அறிவித்துள்ளன.





# இதரச் செய்திகள்

## மனிதக் குடியிருப்புகளில் சமத்துவமின்மை

- தற்போது புதிய தொல்பொருள் சான்றுகள் பொருளாதாரச் சமத்துவமின்மையானது சுமார் 10,000 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருவதாகக் கூறுகின்றன.
- ஆராய்ச்சியாளர்கள் உலகெங்கிலும் உள்ள சுமார் 2,99 க்கும் மேற்பட்ட தொல்பொருள் தளங்களிலிருந்து தரவுகளைப் பதிவு செய்து பல தொன்மையானக் குடியிருப்புகளின்

உலகளாவிய தொல்லியல் தரவுத் தொகுப்பில் பொருள்சார் சமத்துவமின்மை மற்றும் நிலைத்தன்மையைப் பகுப்பாய்வு செய்துள்ளனர்.

- ஒவ்வொரு தளத்திற்கும், 0 (முறையான சமத்துவம்) முதல் 1 (அதிகபட்ச சமத்துவம் இன்மை) வரையிலான பொருளாதாரச் சமத்துவமின்மையின் பொதுவான அளவீடான கினி குணகத்தை ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டனர்.
- பொருளாதாரச் சமத்துவமின்மை என்பது தனிநபர் அல்லது குழுக்களிடையே காணப் படும் செல்வம் மற்றும் வளங்களின் சமமற்றப் பரவலைக் குறிக்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★